**பிப்ரவரி – 14**

# TNPSC துளிகள்

- HAL நிறுவனத்தின் ஒரு முதன்மைப் பயிற்சி விமானமான ஹிந்துஸ்தான் ஜெட் பயிற்சி விமானம் HJT-36 ஆனது, சில மிகப்பெரிய மாறுதல்களுக்குப் பிறகு 'யாஷாஸ்' என மறு பெயரிடப் பட்டுள்ளது.
- நாடு முழுவதும் நிலவும் அமைதியின்மையைக் கட்டுப்படுத்துவதற்காகவும், பொது மக்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காகவும் வங்காள தேசத்தின் இடைக்கால அரசாங்கம் ஆனது 'டெவில் ஹண்ட்' என்ற ஒரு சிறப்பு நடவடிக்கையினைத் தொடங்கி உள்ளது.
- 39வது தேசிய விளையாட்டுப் போட்டிகளை (2027) நடத்துவதற்கு மேகாலயா மாநிலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## அடல் புஜல் யோஜனா விரிவாக்கம்




- அடல் புஜல் யோஜனா திட்டத்தினை பீகார், பஞ்சாப் மற்றும் தமிழ்நாடு உட்பட மேலும் ஐந்து மாநிலங்களுக்கு விரிவுப்படுத்துவதற்கு மத்திய அரசுத் திட்டமிட்டுள்ளது.
- இந்தத் திட்டம் ஆனது நீர் பற்றாக்குறை உள்ள ஏழு மாநிலங்களில் நிலத்தடி நீர் நிலைத் தன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அடல் புஜல் யோஜனா (அடல் ஜல்) திட்டமானது, 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நடைமுறையில் உள்ளது.
- ஹரியானா, குஜராத், கர்நாடகா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, இராஜஸ்தான் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய ஏழு மாநிலங்களில் உள்ள 80 மாவட்டங்களில் 222 நிர்வாகத் தொகுதிகள் அல்லது தாலுகாக்களில் உள்ள நீர்ப் பற்றாக்குறை உள்ள 8,774

கிராமப் பஞ்சாயத்துகளை இது உள்ளடக்கியது.

- இந்தத் திட்டம் ஆனது ஐந்து ஆண்டுகளுக்குச் செயல்படுத்தப்பட உள்ளது.

## UDAN 5.5





- பிராந்திய விமானப் போக்குவரத்து இணைப்பை மேம்படுத்துவதற்காக என்று மத்திய அரசானது அதன் மிக முதன்மையான UDAN (உடே தேஷ் கா ஆம் நாக்ரிக்) திட்டத்தின் அடுத்த கட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- UDAN 5.5 ஆனது தொலைதூரப் பகுதிகள், மலைப்பாங்கான பகுதிகள் மற்றும் தீவுப் பகுதிகளில் தொலைதூரப் போக்குவரத்து இணைப்பை மேம்படுத்த முயல்கிறது.
- இந்தத் திட்டத்தின் சமீபத்தியக் கட்டத்தில், கடல் சார் விமானங்கள், ஹெலிகாப்டர்கள் மற்றும் 20க்கும் குறைவான பயணிகளை ஏற்றிச் செல்லும் திறன் கொண்ட மிகவும் சிறிய விமானங்களுடன் பிரத்தியேகச் சேவை வழங்கப்படுகின்ற சில வழித்தடங்கள் உருவாக்கப் படும்.
- 5.5 என்ற சமீபத்திய கட்டமானது, நீர்நிலைகள், குளங்கள் மற்றும் அணைகள் உள்ளிட்ட சுமார் 80 நீர்நிலைகளுக்கு இடையே உள்ள கடல் சார் விமானப் போக்குவரத்து வழித் தடங்களை வரைபடமாக்குவதற்கு நிறுவனங்களுக்கு வாய்ப்பளிக்கிறது.
- இந்தத் திட்டத்தில் சேவை வழங்கீட்டு நிறுவனங்கள் ஹெலிகாப்டர் வழித் தடங்களை வரைபடமாக்குவதற்காக என, சுமார் 400 ஹெலிகாப்டர் இறங்கு தளங்களும் சேர்க்கப் பட்டுள்ளன.

## Klub-S ஏவுகணை அமைப்பு

- நம்நாட்டின் நீர்மூழ்கிக் கப்பல் படைக்காக கப்பல் எதிர்ப்புச் சீர்வேக எறிகணைகளை வாங்குவதற்காக இந்தியா ரஷ்யாவுடன் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இது உள்நாட்டிலேயே மாறுபாடு செய்யப்பட்ட மாஸ்கோவின் கிலோ ரக நீர்மூழ்கிக் கப்பல் வகையான இந்தியக் கடற்படையின் சிந்துகோஷ் ரகமான டீசல் எரிபொருளில் இயங்கும் மின்சார நீர்மூழ்கிக் கப்பல்களில் பொருத்தப்படும்.
- Klub-S ரக எறிகணை என்பது ரஷ்யாவின் நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து ஏவப்படக் கூடிய 3M-54 காலிபர் ரக கப்பல் எதிர்ப்பு எறிகணைகளின் ஏற்றுமதிக்கான வடிவமாகும்.
- இந்த வடிவமானது, எதிரி நாட்டுப் பாதுகாப்பு அமைப்புகளின் செயல்பாட்டை நன்கு தவிர்க்கக் கூடிய அதன் மீயொலி வேகத் திறன்களுக்கு முக்கியத்துவம் பெற்றது.

- ஒவ்வொரு எறிகணையும் சுமார் 10 முதல் 15 மீட்டர் (32 முதல் 49 அடி) உயரத்தில் கடற்படை மற்றும் நிலத்தில் உள்ள இலக்குகளுக்கு எதிராக மிக அதிகபட்சமாக 300 கிலோ மீட்டர் (186 மைல்) தூரம் வரையில் இயங்கும் திறன் கொண்டவை என்பதால் இது நீண்ட தூர வரம்புடைய துல்லியத் தாக்குதல் திறன்களைக் கொண்டுள்ளது.



# சர்வதேசச் செய்திகள்

## நெட்சாரிம் வழித்தடம்




- இஸ்ரேலிய நாட்டு ராணுவம் ஆனது காசாவின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளைப் பிரிக்கும் நெட்சாரிம் வழித்தடம் என்று அழைக்கப்படும் பகுதியிலிருந்து தனது நாட்டு ஆயுதப் படைகளை விலக்கியுள்ளது.
- இந்த ஒரு நடவடிக்கையானது, இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனப் போராளிகள் குழுவிற்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகும்.
- 2025 ஆம் ஆண்டு ஜனவரி 19 ஆம் தேதியன்று தொடங்கப்பட்ட போர் நிறுத்தம் ஆனது, தற்போது அங்கு நடைபெற்று வரும் போரில் ஓர் இடைநிறுத்தத்தைக் குறித்தது.
- இது மிகவும் குறிப்பாக இப்போரினால் பாதிக்கப்பட்ட வடக்குப் பகுதிகளில் உள்ள


பாலஸ்தீனியர்களைத் தங்கள் பகுதிகளுக்குத் திரும்ப வழிவகுத்தது.

- இந்தப் போர் நிறுத்தம் ஆனது ஹமாஸ் குழுவினரால் கைப்பற்றப்பட்ட சில பணயக் கைதிகளை பரிமாறிக் கொள்ளவும் விடுவிக்கவும் உதவியுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## சர்வதேசப் பரிவர்த்தனைகளுக்கான AFA

- பன்னாட்டு "Card Not Present - நேரடி அட்டைச் சமர்ப்பிப்பு இன்றி மேற்கொள்ளப்படும்" (CNP) பரிவர்த்தனைகளுக்கான கூடுதல் அங்கீகாரக் கூறுகளை (AFA) செயல்படுத்த உள்ளதாக இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.
- AFA ஆனது, உள்நாட்டு எண்ணிம கட்டணச் சூழல் அமைப்பில் மோசடியைக் நன்கு குறைப்பதில் ஏற்கனவே அதன் செயல்திறனை நிரூபித்துள்ளது.
- இதுவரையில், சர்வதேசப் பரிவர்த்தனைகளுக்கு AFA கட்டாயப்படுத்தப்படவில்லை.
- தற்போது, கட்டாயப் பதிவு, மாற்றம் அல்லது நீக்கம் போன்ற நடவடிக்கைகளில் AFA அவசியம் என்று கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- இந்தப் புதிய அமைப்பின் கீழ் தானியங்கு அடிப்படையிலான பற்று கட்டணங்களுக்கு கூட வாடிக்கையாளர்கள் வங்கியால் விதிக்கப்பட்டபடி, OTP அல்லது வேறு அங்கீகார முறை மூலம் தங்களது கட்டணத்தினை அங்கீகரிக்க வேண்டும்.




## NDS-OM இணையதளம்


- இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தினால் பதிவு செய்யப்பட்ட வங்கி சாராத தரகுப் பேச்சுவார்த்தை சார்ந்த -கொள்முதல் பொருத்த (NDS-OM) தளத்தினை அணுகுவதற்கு இந்திய ரிசர்வ் வங்கி அனுமதிக்கும்.
- இந்திய ரிசர்வ் வங்கியினால் இயக்கப்படும் இந்த NDS-OM தளம் ஆனது, அரசாங்கப் பத்திரங்களில் (G-Secs) இரண்டாம் நிலை சந்தை வர்த்தகத்திற்காக என ஒரு பெயர் அறியப் படாத கொள்முதல் பொருத்த அமைப்பாகும்.
- தற்போது, இந்த NDS-OM அமைப்பிலான உறுப்பினர் சேர்க்கையானது, இந்திய ரிசர்வ் வங்கியில் அரசுப் பத்திரப் பரிமாற்றங்களுக்கான கணக்குகளைப் பேணும் வங்கிகள், முதன்மை ஒப்பந்ததாரர்கள், முக்கியக் காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் சில பரஸ்பர

நிதிகள் போன்ற நிறுவனங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

| | Primary Bond Market | Secondary Bonds Market |
|---|---|---|
| Definition | Here, newly issued debt securities are introduced for the first time and subsequently sold to investors. | Here, previously issued debt securities are bought and sold among investors. |
| Participants | Companies, governments, financial institutions, individual investors, etc. | Institutional investors, individual investors, traders, etc. |
| Issuer Involvement | The issuer directly sells the debt securities to investors through merchant bankers or by themselves. | The issuer is not directly involved here. |
| Pricing | Price is typically set through auctions. In case of private placement, prices are pre-fixed. | Prices are based on supply and demand dynamics and prevailing market conditions. |

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## LVM-3 மீக்குளிர் நிலையிலான இயந்திரம்





GSLV MKIII Vehicle configuration

- இஸ்ரோ விண்வெளி நிறுவனமானது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட CE20 மீக்குளிர் நிலையிலான இயந்திரத்தின் எரியூட்டல் சோதனையை வெற்றிகரமாக மேற்கொண்டு உள்ளது.
- இது இஸ்ரோவின் மார்க்-III (LVM-III) எநனும் விண் ஏவு கலத்தின் மேல் நிலைக்கு ஆற்றல் அளிக்கும்.

- மீக்குளிர் நிலையிலான இந்த இயந்திரங்கள் மிகவும் அதிகளவில் குளிரூட்டப்பட்ட எரி பொருட்களை (திரவ ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜன்) பயன்படுத்துவதால் மிகவும் சிக்கலானவை.
- மனிதர்களைச் சுமந்து செல்வதற்கு ஏற்றது என மதிப்பிடப்பட்ட LVM-III வடிவமானது சுற்றுப்பாதையில் இருந்தபடி எரியூட்டல் செயல்முறை தேவைப்படுகின்ற ககன்யான் திட்டத்தில் பயன்படுத்தப்படும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## எண்ணெய் அகழகெடுப்பு - திப்ரு சாய்கோவா தேசியப் பூங்கா





- சுற்றுச்சூழல் துறை அமைச்சகத்தின் வன ஆலோசனைக் குழு (FAC) ஆனது, ஆராய்ச்சி நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும் என்ற ஒரு நிபந்தனையின் பேரில், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தினை மேற்கொள்வதற்கு என்று பரிந்துரை செய்துள்ளது.
- OIL நிறுவனத்தின் படி, இந்த ERD (அதிக செங்குத்து உயரத்தில் துளையிடுதல்) தொழில் நுட்பம் ஆனது மேற்பரப்பில் எந்தவித இடையூறும் செய்யாமல் சுமார் 3,500-4,000 மீட்டர் ஆழத்தில் துளையிட முடியும்.
- கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், பாக்ஜன் எண்ணெய் வயலில் தற்போதுள்ள மூன்று கிணறுகளிலிருந்து இந்த ERD தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி திப்ரு சாய்கோவா தேசியப் பூங்காவிற்குள் ஏழு கிணறுகளைத் தோண்டுவதற்கான ஒரு திட்டத்தினை FAC நிராகரித்தது.
- 2006 ஆம் ஆண்டில், தேசியப் பூங்காக்கள், சரணாலயங்கள் மற்றும் வனப்பகுதிகள் ஆகியவற்றுக்குள் "எந்த வகையாக இருந்தாலும்" சுரங்கம் தோண்டுவதற்கு அனுமதி அளிக்கப் படாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- 2023 ஆம் ஆண்டில், தேசியப் பூங்காக்கள் மற்றும் சரணாலயங்களைச் சுற்றி சுரங்கப் பணிகளை மேற்கொள்வதற்கான தடை மண்டலத்தை ஒரு கிலோமீட்டர் சுற்றுப் பகுதி வரை நீட்டித்தது.
- 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், சுற்றுச்சூழல் அமைச்சகம் ஆனது, தேசியப் பூங்காக்கள், சரணாலயங்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள சுற்றுச்சூழல் தாங்குந்

திறன் மண்டலங்களுக்குள் தவிர, வன அனுமதியினைப் பெறுவதில் இருந்து இந்த ERD திட்டங்களுக்கு விலக்கு அளித்தது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## ஊழல் கண்ணோட்டக் குறியீடு (CPI) 2024



| Score | Country | Rank |
|---|---|---|
| 90 | Denmark | 1 |
| 88 | Finland | 2 |
| 84 | Singapore | 3 |
| 83 | New Zealand | 4 |
| 81 | Luxembourg | 5 |
| 81 | Norway | 5 |
| 81 | Switzerland | 5 |
| 80 | Sweden | 8 |
| 78 | Netherlands | 9 |
| 77 | Australia | 10 |




- டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் என்ற அமைப்பானது 2024 ஆம் ஆண்டிற்கான ஊழல் கண்ணோட்டக் குறியீட்டினை (CPI) வெளியிட்டுள்ளது.
- ஊழல் குறைவாக உள்ள நாடுகளின் பட்டியலில் டென்மார்க் முதலிடத்திலும், அதைத் தொடர்ந்து பின்லாந்து மற்றும் சிங்கப்பூர் ஆகியவை அடுத்த இரண்டு இடங்களிலும் உள்ளன.
- 2024 ஆம் ஆண்டிற்கான ஊழல் கண்ணோட்டக் குறியீட்டில் (CPI) இடம் பெற்றுள்ள 180 நாடுகளில் இந்தியாவின் ஒட்டு மொத்த மதிப்பெண் ஒரு புள்ளி குறைந்து 38 ஆகக் குறைந்ததால் இந்தியா 96வது இடத்தைப் பிடித்தது.
- இந்தக் குறியீடானது, சுழியிலிருந்து 100 வரையிலான அளவுருவினைப் பயன்படுத்தச் செய்கிறது என்பதோடு இதில் "சுழியம்" என்பது அதிக ஊழல் மிக்க நாடாகவும் "100" என்பது ஊழல் குறைந்த நாடாகவும் வகைப்படுத்தப்படுகிறது.
- இந்தியாவின் ஒட்டு மொத்த மதிப்பெண் ஆனது 2024 ஆம் ஆண்டில் 38 ஆகவும், 2023 ஆம் ஆண்டில் 39 ஆகவும், 2022 ஆம் ஆண்டில் 40 ஆகவும் இருந்தது.
- 2023 ஆம் ஆண்டில் இக்குறியீட்டில் இந்தியாவின் தரவரிசை 93 ஆக இருந்தது.
- இந்தியாவின் அண்டை நாடுகளில், சீனா 76வது இடத்தையும், பாகிஸ்தான் 135வது இடத்திலும் மற்றும் இலங்கை 121வது இடத்திலும், வங்காளதேசம் 149 வது இடத்தையும் இதில் பிடித்துள்ளன.
- தெற்கு சூடான் மற்றும் சோமாலியா ஆகிய நாடுகள் இதில் முறையே 8 மற்றும் 9 மதிப்பெண்களுடன் இக்குறியீட்டின் கடைசி இடத்தில் இடம் பெற்றன.
- வெனிசுலா மற்றும் சிரியா ஆகிய நாடுகள் 10 மற்றும் 12 மதிப்பெண்களுடன் அதிக ஊழல் நிறைந்த நாடுகளின் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.
- உலக சராசரியான 43 மதிப்பெண் என்பது பல ஆண்டுகளாக ஒரு நிலையாக உள்ளது

என்ற அதே நேரத்தில் மூன்றில் இரண்டு பங்கு நாடுகள் சுமார் 50க்கும் குறைவான மதிப்பெண்களைப் பெற்றுள்ளன.

# மாநிலச் செய்திகள்

## மொரண்ட்-கஞ்சல் நீர்ப்பாசனத் திட்டம்


- மத்தியப் பிரதேசத்தில் மொரண்ட்-கஞ்சல் என்ற நீர்ப்பாசனத் திட்டத்தின் கட்டுமானப் பணிகள் ஆனது புலிகள் நடமாடும் வனப் பகுதிகளை மூழ்கடிக்கக் கூடும் என்று தேசியப் புலிகள் வளங்காப்பு ஆணையம் (NTCA) எச்சரித்துள்ளது.
- இந்தத் திட்டத்தில், மாநிலத்தின் ஹோஷங்காபாத், பெதுல், ஹர்தா மற்றும் காண்ட்வா மாவட்டங்களில் நீர்ப்பாசனத்தை மேம்படுத்துவதற்காக மொரண்ட் மற்றும் கஞ்சல் நதிகளில் இரண்டு அணைகள் கட்டப்பட உள்ளது.
- இந்த அணை மற்றும் அதனுடன் தொடர்புடைய பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகளின் கட்டுமானப் பணிகளானது, 644 குடும்பங்களை இடம் பெயர்க்கும் என்பதோடு இதில் வாழ்வாதாரத்திற்காக இந்தக் காட்டைச் சார்ந்துள்ள 604 பழங்குடியினக் குடும்பங்கள் அடங்கும்.
- 5.75 லட்சம் மரங்கள் வெட்டப்பட உள்ளதால் ஏழு லட்சத்திற்கும் மேற்பட்ட மரங்கள் நீர்த் தேக்கத்தின் முழு நீர் மட்டத்தினால் பாதிக்கப்படும்.




## நகோபா ஜடாரா 2025 - தெலுங்கானா

- தெலுங்கானாவின் இந்தர்வெல்லி மண்டலத்தில் உள்ள கெஸ்லாப்பூர் கிராமத்தில் 'நகோபா ஜடாரா' கொண்டாடப்படுகிறது.
- இது ராஜ் கோண்ட் மற்றும் பிரதான் இனப் பழங்குடியினரின் மெஸ்ராம் குலத்தின் போய்குட்டா கிளையின் புகழ்பெற்ற வருடாந்திரப் பழங்குடியின திருவிழா ஆகும்.
- இது தெலுங்கானா மாநிலத்தின் சம்மக்கா சரலம்மா ஜடாராவிற்கு அடுத்தபடியாக இந்தியாவின் இரண்டாவது பெரியப் பழங்குடியின விழாவாகும்.
- கோண்ட் பழங்குடியினர் உலகின் மிகப்பெரிய பழங்குடியினக் குழுக்களில் ஒன்று என்பதோடு, இது நான்கு பழங்குடியினப் பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- பிரதான் குழுவினர் கோண்ட் பழங்குடியினரின் உட்கிளையாகக் கருதப்படுகிறார்கள்.

❖ அவர்கள் கோண்ட் இனப் பிரிவினருக்கு வேண்டி புராணங்கள், நாட்டுப்புறக் கதைகள் மற்றும் அவர்களின் கடவுள்கள் மற்றும் தெய்வங்களின் பாடல்களைப் பாடுகின்றப் பாரம்பரியப் பாடகர்களாக உள்ளனர்




## விளையாட்டு செய்திகள்

### மாற்றுத் திறனாளிகளுக்கான ஆசிய வில்வித்தை கோப்பைப் போட்டி 2025


ASIA PARA ARCHERY CUP 2025
STANDINGS

| GROUP STAGE | Gold | Silver | Bronze | TOTAL |
|---|---|---|---|---|
| 1. INDIA | 6 | 3 | 3 | 12 |
| 2. THAILAND | 3 | 1 | 4 | 8 |
| 3. INDONESIA | 1 | 4 | 1 | 6 |
| 4. SLOVENIA | 1 | 0 | 0 | 1 |
| 5. CHINESE TAIPEI | 0 | 2 | 0 | 2 |
| 6. PHILIPPINES | 0 | 0 | 2 | 2 |
| 7. SINGAPORE | 0 | 0 | 1 | 1 |


❖ உலகத் தரவரிசையிலான ஒரு போட்டியான 2025 ஆம் ஆண்டிற்கான மாற்றுத் திறனாளிகளுக்கான வில்வித்தை ஆசியக் கோப்பை தாய்லாந்தின் பாங்காக் நகரில் நடைபெற்றது.

❖ 27 உறுப்பினர்களைக் கொண்ட இந்திய வில்வித்தை அணியானது ஆறு தங்கப் பதக்கங்களை வென்று இந்தப் பதக்கப் பட்டியலில் முதலிடம் பிடித்தது.

- ஒட்டு மொத்தமாக, இந்திய அணியானது ஆறு தங்கம், மூன்று வெள்ளி மற்றும் மூன்று வெண்கலம் உட்பட 12 பதக்கங்களை வென்றது.

# முக்கிய தினங்கள்

## உலக யுனானி தினம் - பிப்ரவரி 11




- இந்தத் தினமானது, யுனானி பயிற்சியாளர், அறிஞர் மற்றும் மிகவும் தொலைநோக்குச் சிந்தனையாளரான ஹக்கீம் அஜ்மல் கான் அவர்களின் பிறந்த நாளைக் குறிக்கிறது.
- யுனானி மருத்துவத்தின் முக்கியத்துவம் மற்றும் செயல்திறன் குறித்து நிபுணர்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவதன் மூலம் இப்பண்டைய சுகாதார அமைப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'Innovations in Unani Medicine for Integrative Health Solutions' என்பதாகும்.


## பாதுகாப்பான இணைய தினம் 2025 - பிப்ரவரி 11




- இணையப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை மிகவும் ஏற்படுத்துவதையும், மக்கள் பாதுகாப்பு கட்டமைப்புகளில் இணைய உலவல்களை மேற் கொள்ள உதவுவதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நாள் ஆனது முதன்முதலில் 2004 ஆம் ஆண்டு EU SafeBorders திட்டத்தின் ஒரு முயற்சியாகத் தொடங்கப்பட்டது.

- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Together for a Better Internet" என்பது ஆகும்.

## தேசிய உற்பத்தித் திறன் தினம் - பிப்ரவரி 12





- பொருளாதார வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மையை அடைவதில் உற்பத்தித்திறனின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இது தேசிய உற்பத்தித்திறன் சபையின் (NPC) வழிகாட்டுதலின் கீழ் அனுசரிக்கப் படுகிறது.
- இந்தத் தினமானது பிப்ரவரி 12 முதல் 18 ஆம் தேதி வரை நடைபெறும் ஒரு வார கால நிகழ்வின் ஒரு பகுதியாகும்.
- இந்த நாள் ஆனது 1958 ஆம் ஆண்டு பிப்ரவரி 12 ஆம் தேதியன்று பதிவு செய்யப்பட்ட தேசிய உற்பத்தித்திறன் சபை (NPC) நிறுவப்பட்டதை நினைவு கூருகிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு: "From Ideas to Impact: Protecting Intellectual Property for Competitive Startups."

## மிகவும் வன்முறை மிக்க பயங்கரவாதத்தினைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் - பிப்ரவரி 12

- மிகவும் வன்முறை மிக்க பயங்கரவாதத்துடன் தொடர்புடைய அச்சுறுத்தல்கள் ஆனது தீவிரவாதத்திற்கு ஏதுவானதாக மாறுவது குறித்த மிகப்பெரும் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், இது தொடர்பாக சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொது சபையினால் நிறுவப்பட்ட இத்தினமானது, 2023 ஆம் ஆண்டில் முதல் முறையாக அனுசரிக்கப்பட்டது.
- மிகவும் வன்முறை மிக்க பயங்கரவாதத்தின் ஒரு உலகளாவிய எழுச்சியை நிவர்த்தி செய்வதற்காக, 2016 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் தேதியன்று மிகவும் வன்முறை மிக்க பயங்கரவாதத்தைத் தடுப்பதற்கான செயல் திட்டத்தினை ஐக்கிய நாடுகள் சபை அறிமுகப்படுத்தியது.
- இந்தக் கட்டமைப்பு ஆனது, பாதுகாப்பு அடிப்படையிலான ஒரு பயங்கரவாத எதிர்ப்பு

நடவடிக்கைகளுக்கு அப்பாலான ஒரு விரிவான அணுகுமுறையை வலியுறுத்துகிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★